## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

*******

ஆணை எண். 32/மா/2021
நாள்.27.09.2021

திரு கே.ஆர்.காஞ்சித்துரை,
திண்டுக்கல் – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திண்டுக்கல் மாநகராட்சி
நகரமைப்பு அலுவலர்,
திண்டுக்கல் – எதிர் மனுதாரர்கள்
மாநகராட்சி

திண்டுக்கல் மாநகராட்சி, பெரியார் அவுஸ், 57, பிள்ளையார்பாளையம் பாண்டியன் நகர், திண்டுக்கல் என்ற முகவரியில் வசிக்கும் திரு கே.ஆர். காஞ்சித்துரை அவர்களின் 15.07.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு 32/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

### ஆணை

திண்டுக்கல் மாநகராட்சி பெரியார் அவுஸ், 57, பிள்ளையார்பாளையம், பாண்டியன் நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு கே.ஆர். காஞ்சித்துரை என்பவர் திண்டுக்கல் மாநகராட்சி 4வது வார்டு பிள்ளையார்பாளையம் சர்வே எண். 165, 166 ஆகிய புல எண்களில் அனுமதியற்ற 3 மாடிகள் கொண்ட கட்டிடம் திரு செல்லத்துரை என்பவரால் கட்டப்பட்டு வந்ததை முன்னாள் ஆணையாளர்

திரு மனோகரன் அவர்களால் பலமுறை அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டக்கூடாது என்று அறிவிப்பு கொடுத்தும் கேளாமல் கட்டி வந்ததால் கட்டிடத்தை சீலிட மற்றும் இடிக்க உத்தரவு பிறப்பித்தார். குடிநீர், பாதாளசாக்கடை இணைப்பு, மின்சாரம், வரிவகைகள் போன்றவைகள் போடக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார். இந்நிலையில் ஆணையாளர் திரு மனோகரன் அவர்கள் மாறுதலில் சென்று அடுத்ததாக வந்த ஆணையாளர் திரு செந்தில்முருகன் அவர்கள் நகரமைப்பு அலுவலர் திரு வீ. பெரியசாமி அவர்களுடன் சேர்ந்து அனுமதியில்லா கட்டிடத்தை இடிப்பதற்கு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வரும் நிலையில் எவ்வித நீதிமன்ற அனுமதியும் இல்லாமல் முறைகேடாக (ஊழல் செய்தது) குடிநீர்இணைப்பு, பாதாளசாக்கடை இணைப்பு உட்பட அனைத்து சலுகைகளையும் ஆணையாளர் திரு செந்தில்முருகன் மற்றும் திரு வீ.பெரியசாமி (TPO) ஆகியோர் கொடுத்து சட்டத்தையும், நியாயத்தையும் மீறியுள்ளார்கள். இவர்கள் மீது சட்டப்படியிலான நடவடிக்கை எடுக்க கோரி இம்முறைமன்றத்தில் முறையீடு செய்துள்ளார்.

மேலும் தமது குற்றச்சாட்டுகளுக்கு ஆதார ஆவணமாக கட்டிட வேலையை நிறுத்த மாநகராட்சி மூலம் கொடுக்கப்பட்ட அறிவிப்பு, மின் இணைப்பு வழங்கக் கூடாது என மாநகராட்சி மூலம் மாநகராட்சி பொறியாளருக்கு அறிவிப்பு வழங்கியது மற்றும் குடிநீர், பாதாளசாக்கடை இணைப்பு வழங்க வேண்டாம் என மாநகராட்சி பொறியாளருக்கு அறிவிப்பு வழங்கிய அனைத்தையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்று சமர்ப்பித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர், எதிர்மனுதாரர்களான ஆணையாளர் திரு செந்தில்முருகன், நகரமைப்பு ஆய்வாளர் திரு.வீ.பெரியசாமி ஆகியோர்களை 15.02.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்றத்தின் 04.02.2021 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. 15.02.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு மனுதாரரான திரு கே.ஆர்.காஞ்சித்துரை ஆஜராகி கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

" திண்டுக்கல் மாநகராட்சி 4வது வார்டு, சர்வே எண்.165, 166 ஆகிய புல எண்களில் அனுமதியற்ற கட்டிடத்தை திரு செல்லத்துரை என்பவர் கட்டிக்கொண்டு இருப்பதை கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் திண்டுக்கல் மாநகராட்சியில் பல புகார்கள் அளித்தும் நடவடிக்கை இல்லாமல் இருப்பது குறித்து இந்த முறையீடு செய்யப்படுகிறது. திரு மனோகரன், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையளராக இருந்தபோது அனுமதி இல்லாமல், விதிமுறைகளை மீறி திரு செல்லத்துரை கட்டிடத்தை எழுப்பிக் கொண்டு இருந்ததால், குடிநீர் இணைப்போ மின் இணைப்போ, பாதாள சாக்கடை வசதியோ செய்து கொடுக்கக் கூடாது என்று அறிவுறுத்தியிருந்தார். நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருந்தது. தற்போது கட்டட உரிமையாளர் மூன்றாவது மாடியையும் கட்டி முடித்து விட்டார்.

முதலில் மாநகராட்சி அலுவலர்கள் கட்டட வரி மற்றும் சொத்து வரி விதிக்காமல் இருந்தனர். அதன் பின்னர் ஆணையளராக திரு செந்தில்முருகன் மற்றும் T.P.O. திரு வீ. பெரியசாமி பதவியேற்ற பின்னர் விதிகளுக்கு புறம்பாக குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை வசதி செய்து கொடுத்துள்ளனர். நீதிமன்றத்திலும் வழக்கை திரும்பப் பெறுவதற்கு ஆலோசனை அளித்துள்ளதன் படி திரு செல்லத்துரையால் அந்த வழக்கு திரும்பப் பெற்றது தெரிய வருகிறது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று உள்ளூர் திட்டக்குழு உறுப்பினர் அவர்கள் மேற்படி தாவா கட்டடத்தை மூடி சீல் இட உத்தரவிட்ட பின்பு மாநகராட்சி அதிகாரிகள் விதிமுறைகளை எல்லாம் மீறி குடிநீர், பாதாளசாக்கடை இணைப்புகள் வழங்கியதையும், கட்டிட வரி விதிப்புகள் அளித்துள்ள ஆணையினையும் ரத்து செய்வதற்கு இந்த முறையீடு சமர்ப்பிக்கப்படுகிறது. என்னுடைய குற்றச்சாட்டுக்கள் அனைத்திற்கும் ஆதார நகல்கள் விசாரணையின்போது சமர்ப்பித்துள்ளேன். திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதியுடன் உள்ளூர் திட்ட குழு உறுப்பினர் நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தற்போது அதுவும் வாபஸ் பெறப்பட்டது'' என்று தெரிவித்து தமது குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

3. மேலும் நகரமைப்பு ஆய்வாளர் திரு வீ.பெரியசாமி தமது 09.02.2021 நாளிட்ட கடிதத்தில் திரு கே.ஆர்.காஞ்சித்துரை அவர்களின் மனு தொடர்பான பதில்களை தயார் செய்வதற்கு போதிய கால அவகாசம் தேவைப்படுவதால் மற்றொரு நாள் நிர்ணயம் செய்து கால அவகாசம் அளிக்குமாறு கேட்டுக் கொண்டதால் அவருக்கு 23.02.2021 அன்று மதியம் 3 மணிக்கு நேரடி விசாரணைக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டது. 23.02.2021 அன்றைய நேரடி விசாரணைக்கு நகரமைப்பு அலுவலர் திரு வீ.பெரியசாமி ஆஜராகி கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்தார். " முறையீட்டாளர் தனது முறையீட்டில் தனது பக்கத்து வீட்டினரான திரு செல்லத்துரை அவரது மனைவி திருமதி மேரி பெயரில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு வரி விதிப்பு, பாதாள சாக்கடை இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் மின் இணைப்பு வழங்கக் கூடாது என தொடர்ந்து பல புகார்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் மக்கள் குறைதீர்க்கும் நாள் மனுக்கள், மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள், தகவல் பெறும் உரிமைச்சட்ட மனுக்கள் என திரு கே.ஆர்.காஞ்சித்துரை மற்றும் திரு செல்லத்துரை ஆகியோர் தொடர்ந்து பல புகார் மனுக்களை அனுப்பி அலுவலகப் பணிகளுக்கு பல வழிகளிலும் இடையூறு செய்து வந்தனர். காரணம் இருவருக்கும் உள்ள தனிப்பட்ட பகையில் அனைத்து அதிகாரிகளையும் பணி செய்யவிடாமல் தொந்தரவு செய்து வந்தனர்.

4. இந்நிலையில் திரு செல்லத்துரை என்பவர் நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனுவில் உதவிப் பொறியாளர் பாதாள சாக்கடைத் திட்டம், உதவி பொறியாளர், குடிநீர் இணைப்பு, செயற்பொறியாளர் திட்டம், ஆகியோர் மீது அனுப்பிய புகார்களை விசாரணை செய்து அறிக்கை அளிக்கத் தெரிவிக்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் திரு செல்லத்துரை அவர்களை 12.02.2020 –ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் நேரில் அழைத்து விசாரணை செய்ததில் தனக்கும் திரு கே.ஆர்.காஞ்சித்துரை என்பவருக்கும் இடம் அளவீடு செய்வது, கட்டிடம் கட்டுவது ஆகியவைகளில் தகராறு ஏற்பட்டு திண்டுக்கல் மேற்கு காவல் நிலையத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருவதாகவும், அதன் காரணமாக எனக்குத் தர வேண்டிய அடிப்படை வசதிகளை மாநகராட்சி மூலம் செய்து தர இடையூறு செய்வதாகவும் தெரிவித்தார். மேலும் திரு செல்லத்துரை என்பவர் மாநகராட்சி அனுமதியின்றி கட்டிய கட்டிடத்திற்கு நகரமைப்பு பிரிவின் மூலம் அனுமதியற்ற கட்டுமானம் எண் 09/2018/எப்3, நாள். 05.02.2018ல் அறிவிப்பு அனுப்பப்பட்டு குற்றவியல் நீதிமன்றம் திண்டுக்கல்லில் வழக்கு எண். STC No. 311/2018, நாள். 07.07.2018ல் ரூ.1100/– ( ரூபாய் ஆயிரத்து நூறு மட்டும் ) அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், அனுமதியின்றி கட்டிய கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி கோரி வரப்பெற்ற கட்டிட விண்ணப்ப எண்.52/2018/எப்3, நாள். 29.06.2018 ல் கட்டிட, திட்ட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மேலும் திரு செல்லத்துரை கட்டியுள்ள கட்டிடத்திற்கு அரசாணை (நிலை) எண்.161, நாள்.14.11.2000ன்படி வரிவிதிப்பு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் பாதாள சாக்கடை இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு மாநகராட்சி மூலம் வழங்கப்பட்டுள்ளது. அரசாணையில் தெரிவித்திருந்தவாறும் விதிகளுக்குட்பட்டு மட்டுமே தனிமனித உரிமைகள் பாதிக்கப்படக்கூடாது என்ற அடிப்படையிலேயே மேற்கண்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித விதிமீறல்களும் நடைபெறவில்லை. மேலும் திரு செல்லத்துரை என்பவரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P. (MD) No. 11050/2019, நாள்.28.02.2020ல் அவராலேயே திரும்பப்பெறப்பட்டுள்ளது '' என்று தெரிவித்துள்ளார்.

5. மேலும் ஆணையாளர் திரு செந்தில்முருகன் தமது அறிக்கையில் திரு கே.ஆர்.காஞ்சித்துரை, திண்டுக்கல் அவர்களின் 15.07.2020 ஆம் நாளிட்ட மனு மீதான விசாரணை 15.02.2021 ஆம் நாளன்று பிற்பகல் 3 மணி அளவில் நடைபெறவுள்ளதில் ஆஜராக தெரிவித்து அழைப்பாணை வரப்பெற்றுள்ளது. நான் திண்டுக்கல் மாநகராட்சியிலிருந்து ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் பணியிடத்திற்கு பணியிடமாறுதல் செய்யப்பட்டு 13.11.2020 முதல் ஒசூர் மாநகராட்சியில் பணிபுரிந்து வருகிறேன். மேலும், திரு கே. ஆர்.காஞ்சித்துரை, திண்டுக்கல் அவர்களின் 15.07.2020ம் நாளிட்ட மனுவில் கண்ட பொருள் குறித்த கோப்புகள் திண்டுக்கல் மாநகராட்சியில் கையாளப்பட்டு வருகிறது. எனவே

இந்நிலையில் திரு கே.ஆர்.காஞ்சித்துரை, திண்டுக்கல் அவர்களின் 15.07.2020ம் நாளிட்ட மனு தொடர்பான விசாரணை அழைப்பாணையினை மாநகராட்சி ஆணையாளர், திண்டுக்கல் அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

6. இந்நிலையில் தற்போதைய திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர், பொறியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களையும் நேரடி விசாரணைக்கு அழைக்கலாம் என முறைமன்ற நடுவம் முடிவு செய்து மேற்கண்ட மூவரும் 07.07.2021 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 24.06.2021 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு அப்போதைய திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்தார்.

" திண்டுக்கல் மாநகராட்சி 4வது வார்டு பிள்ளையார்பாளையம் பகுதியில் அனுமதியில்லாமல் 3 மாடிகள் கொண்ட கட்டடத்திற்கு அரசாணையின்படி சொத்து வரி ஏற்கனவே விதிக்கப்பட்டுவிட்ட நிலையில், குடிநீர் இணைப்பை பொறுத்த வரையில், ஏற்கனவே பழைய கட்டிடத்தில் குடிநீர் இணைப்பு இருந்து வந்தது. குறிப்பிட்ட கட்டிடத்தை வாங்கிய திரு செல்லத்துரை அதனை அபிவிருத்தி செய்து கட்டிடத்தை கட்டி, பாதாள சாக்கடை இணைப்பினை அப்போதைய ஆணையாளர் திரு மனோகரன் என்பவரால் 01.06.2020 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் திரு செல்லத்துரை அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டியதற்காக நீதிமன்றத்தில் வழக்கு (எண்.47/2018) மாநகராட்சி ஆணையாளரால் தொடரப்பட்டது. இவ்வழக்கின் மீதான தீர்ப்புரையில் சம்பந்தப்பட்ட திரு செல்லத்துரைக்கு அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் 04.02.2019–ல் தொடர் குற்றச்சாட்டாக மற்றொரு வழக்கு எண்.4/2019 தொடரப்பட்டு தற்போது நிலுவையில் உள்ளது என்பதை இம்மன்றத்தின் முன் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கண்ட பொருள் குறித்த விரிவான அறிக்கையினை ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மேற்கண்ட முன்னாள் ஆணையாளர் திரு மனோகரன் மற்றும் பொறியாளர் திரு.கணேசன் ஆகிய இருவரும் மூன்றாண்டுகளுக்கு முன்னர் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்று விட்டனர் என்கிற விவரத்தையும் இம்மன்றத்தின் முன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்தது போல 12.07.2021 நாளிட்ட தமது அறிக்கையை முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார். அவ்வறிக்கையில் முறையீட்டாளர் தனது முறையீட்டில் தனது பக்கத்து வீட்டில் உள்ள திரு செல்லத்துரை மற்றும் அவரது மனைவி திருமதி செல்வமேரி ஆகியோரால் கட்டப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டிடத்திற்கு வரிவிதிப்பு, பாதாள சாக்கடை இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் மின் இணைப்பு வழங்கக்கூடாது என

தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையீட்டாளர் குறிப்பிடும் அனுமதியற்ற கட்டிடம் ஏற்கனவே நிலுவையிலிருந்த பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு மீண்டும் புதிதாக கட்டப்பட்ட குடியிருப்பு கட்டிடமாகும். திரு செல்லத்துரையும் முறையீட்டாளர் திரு கே.ஆர். காஞ்சித்துரையும் அவர்கள் இருவருக்குமிடையே உள்ள இட தாவாவின் பொருட்டு இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள், மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறைதீர்க்கும் நாள் மனுக்கள், தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுக்கள் என பல புகார் மனுக்களை இருவரும் அனுப்பி வந்தனர். இந்த கட்டிடம் திரு செல்லத்துரை என்பவரால் அனுமதியின்றி கட்டப்பட்டதை நகரமைப்பு ஆய்வாளரின் வெளி ஆய்வின்போது கண்டறியப்பட்டு 05.02.2018—ல் நகரமைப்பு ஆய்வாளரால் (இளநிலை பொறியாளர்) அறிக்கை செய்யப்பட்டு அனுமதியற்ற கட்டிடத்தின் கடடுமானம் பணியினை நிறுத்தவும் அனுமதியற்ற கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவும், அறிவுறுத்தி திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் 2013, பிரிவு 274 (1) மற்றும் 296 (1) (2)—ன் கீழ் 05.02.2018—ம் நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன்பிறகு, அன்னார்க்கு திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் 2013 பிரிவு 296(3)—ன் கீழ் 25.04.2018 —ம் நாளிட்ட இறுதி அறிவிப்பு அனுப்பப்பட்டு திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் 2013, பிரிவு 447—ன் கீழ் திண்டுக்கல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் —1ல் மாநகராட்சியால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு 25.06.2018—ல் குற்றச்சாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குற்றப்பத்திரிக்கை எண்.47/18 ஆகும். இக்குற்றச்சாட்டு விசாரணை செய்யப்பட்டு 07.07.2018—ல் STC No.311/18 வழக்கில் திரு செல்லத்துரையின் கட்டிடத்திற்கு ரூ.1100/— நீதிமன்றத்தில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து திரு செல்லத்துரை அனுமதியற்ற கட்டிடத்தின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் 2013—ம் பிரிவு 447 (c ) —ன் கீழ் 10.09.2018—ல் அறிவிப்பு கொடுத்து 04.02.2019—ல் தொடர் குற்றச்சாட்டு செய்ய திண்டுக்கல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் – II ல் குற்றப்பத்திரிக்கை மாநகராட்சியால் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. குற்றப்பத்திரிக்கை எண். 04/2019 ஆகும்.

இந்நிலையில் திரு செல்லத்துரை அவர்களின் பழைய கட்டிடத்திற்கு ஏற்கனவே வரிவிதிப்பு எண். HT 6296—ல் திரு கே.பெருமாள் மணியம் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு 09.12.2014—ல் திரு செல்லத்துரை பெயருக்கு வரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பழைய கட்டிடத்தை இடித்து கட்டிய பிறகு மாநகராட்சி நிதி இழப்பை தடுக்கும் பொருட்டு திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் 2013, பிரிவு 121 மற்றும் 123—ன் படியும் அரசாணை (நிலை) எண்.161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி) துறை, நாள். 14.11.2000—ன் படியும் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும், திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் 2013 (1981—ம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம்)

பிரிவு எண்கள். 195, 196, 197, 198, 199, 200, 201, 202, 203, 204, 205, 432 (5)–ன் கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டம், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 138, 142, 147, 148, 149, 306 (5) ஆகிய பிரிவுகளின் கீழ் திரு சி.செல்லத்துரை கட்டிடத்திற்கு பாதாள சாக்கடை இணைப்பு 01.06.2020 அன்று வழங்கப்பட்டது. குடிநீர் குழாய் இணைப்பு ஏற்கனவே 01.04.2004 நாளன்று வழங்கப்பட்டிருந்தது. மேற்கண்ட இணைப்புகள் வழங்கப்பட்டதில் எவ்வித விதி மீறல்களும் நடைபெறவில்லை. மேலும் திரு சி.செல்லத்துரை என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு W.P. (MD) No. 11050/2019, நாள். 28.02.2020–ல் அவராலேயே திரும்ப பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

7. இந்நேர்வில் மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் அவரது வாக்குமூலம் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் (தற்போது ஓசூர் மாநகராட்சி ஆணையாளர்) திரு ம.செந்தில்முருகன், நகரமைப்பு அலுவலர் திரு வீ.பெரியசாமி ஆகியோரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம் மற்றும் திரு செந்தில்முருகன் ஆணையாளருக்குப் பிறகு பொறுப்பேற்ற ஆணையாளரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை அனைத்தும் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

8. மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டிற்கான ஆதாரங்கள் அனைத்தையும் கவனிக்கையில் அப்போதைய ஆணையாளர் திரு மனோகரன் அவர்களால் பலமுறை அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டக்கூடாது என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாநகராட்சி அலுவலக கடிதம் நாள் 05.02.2018–ல் இந்த உத்தரவு கிடைத்த 24 மணி நேரத்தில் மாநகராட்சி அனுமதியின்றி கட்டிக் கொண்டிருக்கும் கட்டிட வேலையை நிறுத்த வேண்டும் என்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சி அறிவிப்பு நாள் 10.08.2018–ல் இந்த அறிவிப்பு கிடைத்த 24 மணி நேரத்தில் கட்டிட வேலையை நிறுத்திவிட்டு வரைபடங்களுடன் மாநகராட்சி ஆணையாளருக்கு 272–வது பிரிவின்படி விண்ணப்பம் செய்து உரிமையாணை பெறவேண்டியது என்ற அறிவிப்பும் வழங்கப்பட்டுள்ளது. இதை கட்டிட உரிமையாளர் செயல்படுத்தவில்லை. மேலும் 16.08.2018 நாளிட்ட மாநகராட்சி அறிவிப்பில் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்காக திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் 2013–ன்படி, 274, 441 பிரிவின்படி 23.03.2018ம் தேதி அன்றும், 296 (1) (2) பிரிவின்படி 23.03.2015ம் தேதி அன்றும் 296 (3), 447 (c ) –ன்படி 06.06.2018 அன்றும் அறிவிப்பு வழங்கப்பட்டும் கட்டிட அனுமதி வரைபடம் சமர்ப்பிக்காத காரணத்தினால் திண்டுக்கல் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு செய்யப்பட்டு 07.07.2018 அன்று ரூ.1100/ – (ரூபாய் ஆயிரத்து நூறு மட்டும் ) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (STC No. 311/2018) நாளது தேதி வரை தாங்கள் கட்டிட அனுமதி வரைபடம் சமர்ப்பிக்காத காரணத்தினாலும், மேலும் பலமுறை நேரில் சென்று பணிகளை நிறுத்திட அறிவுறுத்தப்பட்டும், தாங்கள் தொடர்ந்து பணிகளை செய்து வருவதால் தங்கள்

கட்டடத்தில் அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெற்றால் தாங்களே முழு பொறுப்பாவீர்கள். திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் 2013 பிரிவு 284-ன்படி பணிகளை நிறுத்தி விட்டு கட்டடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. செய்த தவறுக்காக நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தினால் செய்த குற்றச் செயல் நியாயமாகிவிடாது.

9. மேலும் திண்டுக்கல் மாநகராட்சி ந.க.எண்.1674/2018/எப்3, நாள். 16.08.2018 அறிவிப்பு மூலம் அனுமதியின்றி கட்டடம் கட்டி வரும் திரு செல்லத்துரை த/பெ. செல்லையா என்பவரின் கட்டிடத்திற்கு குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு வழங்க வேண்டாம் என்று மாநகராட்சி பொறியாளர்(பொ) அவர்களுக்கு குறிப்பு வழங்கியுள்ளது. அப்போதைய ஆணையாளர் திரு மனோகரன் அவர்களின் ந.க. எண். 1674/4/2018/எப்3, நாள். 16.08.2018-ல் திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 2, கதவு எண். 37, நாராயண நகர், பிள்ளையார்பாளையத்தில் திரு செல்லத்துரை த/பெ. செல்லையா என்பவர் அனுமதியின்றி கட்டி வரும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்தால் அதனை துண்டிப்பு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என்று உதவி பொறியாளர் மின்சார வாரியம், நேருஜி நகர் பிரிவு, திண்டுக்கல் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

10. இந்நிலையில் ஆணையாளர் திரு மனோகரன் மாற்றப்பட்டு திரு செந்தில்முருகன் ஆணையாளராக பதவியேற்கிறார். ஆணையாளர் திரு செந்தில்முருகன் அவர்கள் மேற்கூறப்பட்ட அனைத்து நிகழ்வுகளையும் புறம்தள்ளி திரு செல்லத்துரை அவர்களால் மாநகராட்சி அனுமதியின்றி கட்டப்படும் கட்டிட வேலைகளை நிறுத்துவதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்திருப்பது தெரிய வருகிறது. மேலும் இவருடைய காலத்தில் அக்கட்டிடத்திற்கு குடிநீர் குழாய் இணைப்பு, மற்றும் பாதாள சாக்கடை இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது. இச்செயலுக்கு திரு வீ.பெரியசாமி, நகரமைப்பு அலுவலரும் ஆணையாளருக்கு சாதகமாக செயல்பட்டிருப்பதும் தெரிய வருகிறது. ஆணையாளர் திரு செந்தில்முருகன் தமது 09.02.2021 நாளிட்ட அறிக்கையில் தாம் திண்டுக்கல் மாநகராட்சியிலிருந்து ஒசூர் மாநகராட்சிக்கு ஆணையாளராக பணியிட மாறுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் திரு காஞ்சித்துரை அவர்களின் மனு குறித்த கோப்புகள் திண்டுக்கல் மாநகராட்சியால் கையாளப்படுவதால் தற்போதுள்ள திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளருக்கு அழைப்பாணையை அனுப்புங்கள் என்று தெரிவித்திருப்பது பொறுப்பை தட்டிக்கழிக்கும் செயலாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. வேறு இடத்திற்கு பணிமாற்றம் செய்து விட்டால் பழைய இடத்தில் செய்த தவறு சரியாகிவிடாது.

11. எனவே திரு செல்லத்துரை என்பவர் திண்டுக்கல் மாநகராட்சி 4-வது வார்டு, பிள்ளையார்பாளையம், டவுன் சர்வே எண்.165 மற்றும் 166க்கு பழைய சர்வே

எண்.337/1–க்கு கட்டுப்பட்ட மனை எண்.11–ல் சட்டத்திற்கு புறம்பாக அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் 3 மாடி கட்டிடம் தொடர்பாக, திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம் அதன் உறுப்பினர் செயலர் அவர்களுக்கு, புகார்கள் வந்திருப்பதும், அதன் பேரில் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டு வரும் கட்டிடத்தை நிறுத்துமாறு, பல்வேறு தேதிகளில் மேற்படி திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமத்தாலும் ஆணையாளர் திரு மனோகரன் அவர்களாலும் அறிவிப்பு கொடுக்கப்பட்டிருப்பதும் தெரிய வருகின்றது. ஆனால் மேற்படி அறிவிப்பையும் மீறி செல்லத்துரை என்பவர் கட்டிடம் கட்டி வந்த நிலையில் மேற்படி திண்டுக்கல் உள்ளூர் திட்ட குழுமத்தால் தாவா இடத்தில் கட்டி வரும் கட்டிட பணிகளை நிறுத்துமாறு செல்லத்துரை என்பவருக்கு 12.11.2018–ம் தேதி நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டிருப்பதும் தெரிய வருகின்றது. இருப்பினும் பின்னர் பதவியேற்ற திரு ம.செந்தில்முருகன், ஆணையாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் திரு வீ.பெரியசாமி ஆகியோர்கள் இச்செயலை தடுத்து நிறுத்துவதற்கு ஆவண செய்வதை விட்டு அக்கட்டிடத்திற்கு குடிநீர் குழாய் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் மின் இணைப்பு வழங்கியதும் தெரிய வருகிறது.மேற்கண்ட நிகழ்வுகளை கவனமுடன் பரிசீலித்த முறைமன்றம் சட்டத்திற்கு புறம்பாக மாநகராட்சி அனுமதி பெறாமல் திரு செல்லத்துரை என்பவரால் தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் வரை 3 மாடிகள் கொண்ட கட்டிடம் கட்டியதை கட்டிட வேலைகளை தடுத்து நிறுத்துவதற்கான எந்தவித முயற்சியும், ஆக்கபூர்வமான செயலையும் திரு ம.செந்தில்முருகன், ஆணையாளர் மற்றும் திரு வீ.பெரியசாமி, நகரமைப்பு அலுவலர் இருவரும் மேற்கொள்ளவில்லை என்பதும் தெரிய வருகிறது. இது அவர்களுடைய கடமை தவறிய செயலாக முறை மன்ற நடுவம் கருதுகிறது.

12. மேலும் அப்போதைய ஆணையாளர் தமது 07.07.2021 நாளிட்ட வாக்குமூலத்தில் முன்னாள் ஆணையாளர் திரு மனோகரன் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே ஓய்வு பெற்று விட்டார் என்று தெரிவித்துள்ளார். ஆனால் அதே வாக்குமூலத்தில் திரு மனோகரன் அவர்களால் 01.06.2020 அன்று பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருப்பது உண்மைக்கு புறம்பானது. இது குறித்து ஆவணங்களை ஆய்வு செய்ததில் 12.02.2020 நாளிட்டு மாநகராட்சி பொறியாளருக்கு அனுப்பப்பட்டுள்ள மாநகராட்சி குறிப்பில் அப்போது ஆணையாளராக இருந்த திரு செந்தில்முருகன் அவர்களால் திரு செல்லத்துரையின் வீட்டிற்கு ஏற்கனவே துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு மற்றும் புதிய பாதாள சாக்கடை இணைப்பு வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் திரு K.R. காஞ்சித்துரை அவர்களால் கோரப்பட்ட தகவல்களுக்கு பொது தகவல் அலுவலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ந.க. எண்.11164/2018/F3, நாள். 04.09.2018–ல் டவுன் சர்வே எண்.165 மற்றும் 166–ல் கட்டப்படும் கட்டுமானப் பணிகளுக்கு மாநகராட்சியால் அனுமதி ஏதும்

வழங்கப்படவில்லை, கட்டிடத்திற்கு பிளான் அப்ரூவல் எதுவும் வழங்கப்படவில்லை, பாதாள சாக்கடை இணைப்பு வழங்க வேண்டாம், என பாதாள சாக்கடை பிரிவிற்கு குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது, மின் இணைப்பு மற்றும் குழாய் இணைப்பு வழங்க வேண்டாம் என தெரிவித்து மின் வாரியத்திற்கும் மாநகராட்சி பொறியர் பிரிவிற்கும் குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது போன்ற தகவல்களை திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் கவனத்தில் கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது.

13. திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் 2013 (1981 ஆம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம்) பிரிவு எண்கள் 195 முதல் 205 மற்றும் 432(5)–ன் கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள் மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 138, 142, மற்றும் பிரிவு 306(5)ன் கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகளின் கீழ், குடிநீர் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப்பயன் முறையாக திட்ட அனுமதியும் ஒப்புதலும் பெற்று கட்டிடங்கள் கட்டுகின்றனரோ அவர்களுக்குத்தான் பொருந்துமே தவிர இதுபோன்ற விதிமீறல்கள் செய்யும் தனி நபர்களுக்குப் பொருந்தாது என்பது பொது அறிவு அம்சம். இதை மறைத்து இதுபோன்ற விளக்கம் ஆணையாளர் தரப்பில் அளிக்கப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது.

14. 2020ம் ஆண்டு காலகட்டத்தில் இதற்கு உடந்தையாக செயல்பட்ட திரு செந்தில்முருகன், முன்னாள் ஆணையாளர், குடிநீர் மறு இணைப்பு வழங்க ஆணையிட்டுள்ளார். அவரே மின்பிரிவு அலுவலர்களுக்கும் இணைப்புக்கு பரிந்துரை செய்துள்ளார். 19.02.2020 அன்று கழிவு நீர் வடிநீர் இணைப்பிற்கு ஆணைகள் வழங்கப்பட்டது. இவையெல்லாம் விதிகளை மீறி முன்னர் கோப்பில் உள்ள நிலைகளைப் படிக்காமலேயே வேண்டுமென்றே தன்னிச்சையாக செயல்பட்டது அப்பட்டமாக தெரிய வருகிறது.

எனவே திரு செல்லத்துரை என்பவரால் திண்டுக்கல் மாநகராட்சியின் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள 3 மாடி கட்டிடத்தினை விதிகளின்படி செயல்பட்டு திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் இதுபோன்ற ஒழுங்கீனங்கள் தொடருமேயானால் இதையே ஒரு முன்னோடியாக வைத்து மற்ற நகராட்சிகளும் விதிகளை மீறி செயல்பட ஏதுவாகும். மேலும் திரு செல்லத்துரை என்பவர் மாநகராட்சியின் அனுமதி பெறாமல் 3 மாடி கட்டிடம் கட்டியுள்ளது குறித்து மாநகராட்சி ஆணையாளர் செந்தில்முருகன் மற்றும் நகரமைப்பு அலுவலர் திரு வீ.பெரியசாமி ஆகியோர் கட்டிட வேலையை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கத் தவறியதை கருத்தில் கொண்டு அவர்கள் மீது உரிய சட்ட விதிகளின்படி துறை ரீதியாக தக்க நடவடிக்கை மேற்கொள்ள இயக்குநர், நகராட்சி நிர்வாகம் அவர்களுக்கு பரிந்துரைத்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. ஒழுங்கு நடவடிக்கை குற்றச்சாட்டுக்கள் நகல் ஒன்று இந்த அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும் கோரப்படுகிறது.

2021–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

28.9.2021

பெறுநர்

1)திரு கே.ஆர்.காஞ்சித்துரை,
பெரியார் அவுஸ்,
57, பிள்ளையார்பாளையம்,
பாண்டியன் நகர் (அஞ்சல்)
திண்டுக்கல் மாவட்டம்–624 001.

2)ஆணையாளர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்–624 001.

3) இயக்குநர்,
நகராட்சி நிர்வாகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4)திரு ம.செந்தில்முருகன்,
ஆணையாளர்,
ஓசூர் மாநகராட்சி,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

5)திரு வீ.பெரியசாமி,
நகரமைப்பு அலுவலர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்–624 001.

நகல்.
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்